# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ. வெ. ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 11 கற்பனை 9] திருச்சி 15—9—68 [ தனிப் பிரதி 25 காசு


## "பாரதி வாழ்க!"

( சுந்தர சங்கரன் )

பாட்டில் புதுமைகள்
நாட்டிச் சென்றார்-புகழ்
ஈட்டிச் சென்றார்-தமிழ்
மீட்டிச் சென்றார்!-இந்த

நாட்டில் உணர்வினைக்
கூட்டித் தந்தார்-பல
ஏட்டில் தந்தார்-தமிழ்ப்
பாட்டில் தந்தார்!-
அடிமைக்

கூட்டின் தளையை
அறுக்க வந்தார்-புகழ்
பொறிக்க வந்தார்-நலம்
பெருக்க வந்தார்-நிதம்

வாட்டிய வறுமையும்
மறந்து நின்றார்-குணம்
சிறந்து நின்றார்-பணம்
துறந்து நின்றார்-அவர்

காட்டிய வழியினில்
தொடர்ந்து செல்வோம்
பயன்
நிறைந்து கொள்வோம்
-என்றும்
நினைந்து கொள்வோம்
-பாரதி

நாட்டிய கொள்கைகள்
அழியா நிற்கும்-நல்ல
வழியாய் நிற்கும்-
அணையா
ஒளியாய் நிற்கும்-கனல்

மூட்டிய கவிதைகள்
நெஞ்சில் நின்று-மனம்
அஞ்சேல் என்று-உடன்
தஞ்சம் தந்து-துயர்

விட்டிடும்; நெஞ்சுரங்
கூட்டிடும்; தேட்டிடும்
-பகை
ஓட்டிடும்; சாட்டிடும்!

## மனமே புரிந்து கொள்!

(திருச்சி பாரதன்)

உலகைத் திருத்தும் முன்னே—மனமே
உன்னைத் திருத்த வேண்டும்!
கலகம் போக்கும் முன்னே—உனது
கலக்கம் போக்க வேண்டும்!

அருளைப் பொழியும் முன்னே—உன்னில்
அகந்தை விலக்க வேண்டும்
பொருளை வழங்கும் முன்னே—அதிலே
புனிதத் தன்மை வேண்டும்!

நீதி கூறும் முன்னே—நீயே
நேர்மை காக்க வேண்டும்!
வேதம் காணும் முன்னே—இறைவன்
விந்தை புரிய வேண்டும்!

★

## பாரதியார் கவி நயம்

வி ஜி. சீனிவாசன்

பாட்டுத் திறத்தாலே பைந்தமிழின் மாட்சியினை
ஏட்டினிலும் வீட்டினிலும் ஏற்றமுடன்—காட்டவே
ஞாலத்தில் தோன்றியசெஞ் ஞாயிறும் பாரதியே
காலத்தை வென்ற கவி!

உள்ள மகிழ்வளிக்கும் ஓய்ந்தமனச் சோர்வொழிக்கும்
கள்ளமிலா வாழ்வு கமழநல்கும்—தெள்ளமுதச்
சொன்மாலை தந்தபுகழ் சுப்ரமண்ய பாரதியார்
நன்மையாம் வாக்கின் நயம்.

## ாபெரும் டெலஸ்கோப்பை ஏற்படுத்திய ஊர்ட் !

### 40 வயதிற்குள் கணக்கற்ற சாதனை !

வான ஆராய்ச்சித் துறையில் மகத்
ான சாதனைகளைப் புரிந்த டச்சு
புணர் ஊர்ட் என்பவராகும். இவ
க்கு நோபல் பரிசுக்கு சமமான புகழ்
பெற்ற பரிசு வழங்கப்பட்டுள்ளது.
இவருக்கு வழங்கப்பட்டுள்ள கௌர
ப் பட்டங்கள் எவ்வளவு என்பது
இவருக்கே தெரியாது.

பேராசிரியர் ஜான் ஊர்ட் என்பவ
டன் நீங்கள் டெலிபோனில் பேசி
ல் நீங்கள் மிக மிகக் கவனமாகக்
ாது கொடுத்துக் கேட்கவேண்டும்.
அவ்வளவு மெதுவாக அவர் பேசு
வார். அவர் வான ஆராய்ச்சியில்
நிபுணர். அவ்விஷயம்பற்றி பேச
ஆரம்பித்து விட்டால் அவர் எளிதில்
நிறுத்தமாட்டார் என்று அவரு
டைய சகா ஒருவர் கூறியிருக்கிறார்.

இவருக்கு, தனக்களிக்கப்பட்ட கௌரவப்பட்டங்கள் எவ்வளவு என்பது தெரியாதாம். இவர் டாக்டர் பட்டம் பெற்றபோது இவருக்கு வயது 26. 1926ல் யேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நியூஹேவன் வான ஆராய்ச்சி நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் இவர் ஆராய்ச்சிகளை நடத்தியிருந்தார். பின்னர் லேடன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அதே இடத்திலுள்ள வான ஆராய்ச்சி நிலையத்தில் உதவி நெறியாளராக நியமிக்கப்பட்டார்.

ஹாலந்தில் 'ரேடியோ ஆஸ்டராணமி' என்கிற வான சாஸ்திரப் பிரிவில் ஆர்வம் ஏற்படச் செய்யக்காரணமாக இருந்தவரே ஊர்ட் தான். 1956 ராணி ஜூலியா இவருக்கு பட்டம் அளித்துக் கௌரவித்தார். கிழக்கு ஹாலந்தில் டுவெங்கிலோ என்கிற கிராமத்தில் இவ்விழா நடைபெற்றது இந்தஇடத்தில்தான் ஐரோப்பாவிலுள்ள மிகப் பெரிய டெலஸ்கோப் அமைக்கப்பட்டுள்ளது. ஊர்ட்டின் தளரா முயற்சியினால்தான் இந்த டெலஸ்கோப் அமைக்கப்பட்டுள்ளது. இவருடைய சாதனைகள் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் சேர்த்துக் குறிப்பிடுவது என்பது இயலாத காரியம். நாற்பது ஆண்டுகளாக இவர் சாதித்தது பலப்பல. இவருடைய சாதனைகளால் வான வெளிபற்றியும் நட்சத்திர மண்டலம் பற்றியும் பல உண்மைகள் வெளிப்பட்டன.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் கோபர்நீகஸ் என்பவர் வானவெளியில் மத்திய கேந்திரமாக இருப்பது சூரியன் தானேயொழிய பூமி அல்ல என்றும் சூரியனைத்தான் இதர கிரகங்கள் அதனதன் கதியில் சுற்றிவருகிறதென்றும் கண்டுபிடித்தார். கிரகங்களின் போக்கு எப்படி என்பதை எல்லாம் கண்டுபிடித்தவர் ஊர்ட்.

வானவெளி, நட்சத்திர ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளைப் பாராட்டி ஊர்ட்க்கு 1966ம் வருடத்திய வெட்லிஸன் பரிசு அளிக்கப்பட்டார். அந்த அமெரிக்கப் பரிசு மிகவும் உயர்ந்ததென்றும் நோபல் பரிசுக்குச் சமமானதென்றும் வான சாஸ்திர நிபுணர்களால் கருதப்படுகிறது.

ஊர்ட் மிகத் தன்னம்பிக்கையுடையவர். எதிலும் சுத்தம் அதிகம். அதிக சத்தம்போட்டுப் பேசமாட்டார். நல்ல உயரம், எதிலும் ஆழ்ந்த கவனத்தை செலுத்தி சிந்திக்கக்கூடியவர். இவர் 1900 ஆண்டில் பிறந்தார். இவருடைய தகப்பனார் ஒரு டாக்டர். இவருக்கு அயல்நாடுகளிலிருந்து அங்கு சேவை செய்ய அழைப்பு வந்தது. அதை அவர் மறுத்துவிட்டார். ஹாலாந்திடமும் முக்கியமாக லெய்டனிடமும் அவர் மிகப்பற்றுள்ளவராக இருந்தார். அமெரிக்க சஞ்சிகை 'லுக்' ஒரு சமயம் உலக பெரும் சாதனையாளர்களின் பட்டியல் ஒன்றை தயாரித்து பிரசுரித்தது. அதில் ஒரே ஒரு டச்சக்காரர் பெயர்தான் இருந்தது. அப்பெயர்தான் ஊர்ட்.

---

## நோபல் பரிசுபெற்ற நெதர்லாந்து அறிஞர்!

### சாதாரண ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்தவர்!

ஒரு சாதாரண ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்த வான் டெர்வால்ஸ் நெதர்லாந்திலேயே சிறந்த அறிவாளி என்று புகழப்படுவார் என்று யாரும் அன்று எதிர்பார்க்கவில்லை. விஞ்ஞானத்துறையில் இவர் செய்த சேவைக்கும் புதுக் கண்டு பிடிப்புகளுக்கும் 1910ல் இவருக்கு "நோபல்" பரிசு அளிக்கப்பட்டது.

சாதாரண ஆசிரியராக வாழ்க்கையை ஆரம்பித்த வான்டெர்வால்ஸ் நெதர்லாந்தின் மாபெரும் விஞ்ஞானியாகப் புகழ்பெற்றார், கணிதம் பௌதிகம், வான சாஸ்திரம், இவைகளில் இவர் மிகவும் ஈடுபட்டு பல புது கண்டு பிடிப்புகளை வெளியிட்டிருக்கிறார். கல்வியைப் பரப்புவதில் மிகவும் நாட்டம் கொண்டவர். வான்டெர்வால்ஸ்க்கு ஆசிரியராகயிருந்த பிரபல வானசாஸ்திர நிபுணர், பேராசிரியர் கெய்ஸர் 1866லேயே வாஸ்ஸின் திறமையைக் கண்டு வியந்திருக்கிறார்.

ஹேக்கில் ஒரு இலக்கணப்பள்ளியின் தலைமை ஆசிரியராக வால்ஸ் அப்போது நியமிக்கப்பட்டார். நெதர்லாந்தில் மட்டுமின்றி உலகிலேயே அவருடைய புகழ் பரவப்போகிறது என்பதை அப்போது யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆசிரியராக சேவை செய்துக் கொண்டிருக்கையிலேயே அவர் பௌதிக சாஸ்திரத்தில் அக்கறை கொண்டு படிக்க ஆரம்பித்தார். தன் 36ஆவது வயதில் கணிதத்திலும் பௌதிகத்திலும் அவர் டாக்டர் பட்டம் பெற்றார். இதைப்பெற அவர் எழுதிய விஷயம் டச்சு மொழியில் எழுப்பட்ட போதிலும் வெளி உலக விஞ்ஞானிகளின் கவனத்தைக் கவர்ந்தது. இதைப்படித்த பிரிட்டிஷ் பௌதிக நிபுணர் ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெவ் இவர் பெயர் பிரமாதமாக விளங்கப்போகிறது என்பதை அப்போதே கூறிவிட்டார்.

வால்ஸ் எழுதியக் கட்டுரையில் பெரும்பாலான வாயுக்களை அழுத்த சக்திமூலம் திரவரூபத்திற்கு மாற்ற முடியும் என்றும் ஆனால் 6 வித வாயுக்கள் இதற்கு விதி விலக்கு என்றும் குறிப்பிட்டிருந்தார். எல்லா வாயுக்களும் ஒரே விதத் தன்மையாகவே இருந்தபோதிலும் அவை ஒவ்வொன்றும் திரவரூபமாக மாற சீதோஷ்ண நிலை வெவ்வேறுவிதமாக இருக்கிறது என்றும் அது பற்றிய விவரங்களையும் இவர் கண்டுபிடித்து வெளியிட்டார். வால்ஸ் கண்டுபிடித்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டே சர் ஜேம்ஸ் தேவாரும், டச்சு பௌதிக நிபுணர் காமெர்லிங் ஒன்ஸும் ஹைட்ரஜன் வாயுவையும் ஹீலியம் வாயுவையும் திரவரூபமாக்கும் வழியைக்கண்டுபிடித்தனர்.

விஞ்ஞானத்துறையில் வால்ஸ் செய்த சேவைக்காக அவருக்கு 1910ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

விஞ்ஞானத் துறையில் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே அவர் வாழ்ந்தார். அவர் வீட்டுக்கருகில் ஒரு தொழிற்சாலை இருந்தது. அதிலிருந்து பெரும் அளவுக்கு சப்தம் வந்த வண்ணமாக இருந்தது. இந்த சப்தம் உங்கள் சிந்தனைக்கு இடைஞ்சலாக இல்லையா என்று அவரிடம் கேட்டபோது "நான் சிந்தனையில் ஆழ்ந்து விட்டேனானால் எனக்கு எந்த ஓசையும் காதில் விழாது என்று பதிலளித்தார்.

அவரிடம் படிக்கும் மாணவர்களின் சிந்தனையை தூண்டிவிடும்படியாக அவருடைய போதனை இருக்கும். இவர் விளம்பரத்தை விரும்பாதவர். இவருடைய படம் பிரசுரிக்கப்பட்டதே இரு தடவைகளில்தான். ஒன்று நோபல் பரிசுபெற்றபோது, இரண்டாவது காமர்லிங் ஒன்ஸ் ஆராய்ச்சிக் கூடத்திற்கு ஹீலியம் வாயு திரவரூபமாக்கப்பட்டதைக் காண வந்தபோது எடுத்தபடம். எவர் மனதும் புண்படாமல் இருக்கவேண்டும் என்பதே அவருடைய உயர்ந்த கொள்கை.

# எழுத்தாளன்

கனவு 11] கீலக, புரட்டாசி (15-9-68) [கற்பனே 9


## பாரதி பாதை

இவ்வுலக வாழ்வில் எல்லாவித போக போக்யங்களுடன் வாழுபவன் கூட இந்த சுகங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றி நினைத்து ஏங்குகின்றுன்.

இவ்வுலக இன்பம் மனிதனை திருப்தி செய்து விடவில்லை. ஏதோ ஒன்று இன்னும் தேவைப்படுகிறது.

அந்த ஒன்று மனித வாழ்க்கைக்கு அத்யாவசியமான சிந்தனையின் முடிவாக அது இருக்கிறது.

மனிதன் பிறந்தான். வாழ்ந்தான். வளர்ந்தான். சிந்தித்தான். செயல்பட்டான். செயலின் விளைவை அனுபவித்தவர் அனுபூதிமான்கள்.

அனுபூதிமான்களின் முடிவு பிரகாசமானது. அவர்களின் அனுபவம் ரகசியமானது. அவர்கள் சென்ற பாதை நமக்குப் புலப்படுகிறது.

அவர்கள் பட்ட தொல்லைகள் நமக்குப் புலனுகிறது. என்றுலும் அவர்கள்பெற்ற அனுபவம், அவர்கள் சொன்னுர்கள். அதனைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் நமக்கு இல்லை.

பின்பற்றிப் போனவர்கள் விளக்கம் கூறிக் கொண்டே போனுர்கள். அவர்களும் தேன் சேகரிக்க புகுந்த வண்டின் ரீங்காரம் போல மவுனமானுர்கள்.

காணுதை கண்டவர்கள் வாயடைத்து நின்றுர்கள். அவர்களின் மௌனம் நமக்கு ஏதோ ஒன்றை உணர்த்தத் துடித்தது.

அந்த துடிப்பில் வாக்கு எழுந்தது. அந்த வாக்கை அமைக்க சொல் பிறந்தது. சொல் சொல்லாக வந்தாலும் அந்த சொல்லுக்குள் இருந்த செய்தி நமக்கு விளங்கவில்லை.

அந்த செய்தியை விளக்க எழுந்த தாபமே இலக்கிய வளம். எழுத்துப்பணி. அந்தப் பணியில் ஈடுபட்டிருப்போர் எண்ணற்றவர்கள். அவர்களின் உள்ளத்துப் பெட்டகத்தில் மூடிக்கிடக்கும் பொருள்களிடையே இந்தச் செய்தியும் இருக்கிறது.

சிந்தனை வலிமையால், அதை நெருங்குகிறவர்களுக்கு மொழி துணைபுரிகிறது. சொல்வளம், கற்பனைத் திறம், அதனை பகிர்ந்து கொடுக்கும் பாங்கு அத்தனையும் புலப்படுகிறது.

புலன் உணர்வுகளை கட்டி ஆண்டு சிந்திக்கத் தெரிந்தவனுக்கு மேதை என்ற நரம்பு இயங்குகிறது. அந்த நரம்பு இயங்க ஆரம்பித்ததும் அவன் புலவன் ஆகிருன். மேதை ஆகிருன்.

அவன் வாக்கு மக்களுக்கு இன்பம் தருகிறது. விழிப்பைத் தருகிறது. அறிவைத் தருகிறது. வழியைக் காட்டுகிறது. ஆற்றல் தருகிறது. அச்சத்தைப் போக்குகிறது. நம்பிக்கையும் ஊட்டுகிறது.

அருள் பழுத்த உள்ளம்போல அவன் வாக்குகள் தங்கு தடையற்று ஊறி வருகிறது. உயிர்த்தத்துவத்தின் ஜீவ ஊற்றை தூண்டிக் காட்டும் மேதை நரம்பு இயக்கம் சிந்தனைப்பாதையின் இறுதிகட்டமல்ல; முதல் மைல்கல். அதற்கு அப்பால் உள்ள பல படித்தரங்களில் சித்துகள் தெரியும். சித்தம் கட்டுப்பட்டவனுடைய சிறு மூச்சு எல்லாம் சித்தாக விளங்கும்.

அதற்கு மேலும் பேரானந்த சாகரத்தில் தன்னை ஒன்று சேர்க்கும் முயற்சியில் சிந்தை செலுத்திச் செலுத்தி விஞ்ஞானத்தை விஞ்சி ஞான ஒளியாக விளங்க தன் வாழ்வையே இலக்கியமாக்கிவிடுகின்ற லட்சியவாதிகள் பற்பலரை பெற்று பெருமை படைத்தது தமிழகம்.

அண்மையில் நமக்கு வழிகாட்டியாக விளங்கும் பாரதியின் வாழ்க்கை இன்றைய தமிழ் சமுதாயத்திற்கு ஒரு இலக்கிய வாழ்வாக விளங்குகிறது.

பாரதியின் அமுத வாக்குகளில் சித்தம் செலுத்த செலுத்த அவன் வாக்குக்குள்ளே அவன் சொன்ன செய்தி சுருண்டு கிடப்பதைக் கண்டு அதனை விரித்துப்பார்த்து ஆனந்தம் அனுபவிக்க முடிகிறது.

பாரதி நமக்கு இலட்சிய குரு. அவன் சென்ற சிந்தனைப் பாதை நமக்கு ஒளி காட்டிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து செல்ல அனைவரையும் அவரது நினைவு நாளை வைத்து அன்புடன் அழைக்கிறேன். வருக! வருக!

அ. வெ. ர. கிருஷ்ணசாமி

---

## வி. கே. சி. நடராஜன்

வி. கே. சின்னப்பா தேவர் என்ற நடராஜ மாமணி நம்மை விட்டுப் பறந்தோடிவிட்டது. தமிழ்த்தொண்டர் பாஸ்கரத் தொண்டைமான் அவர்களின் மருமகன். அஞ்சா நெஞ்சமும், அப்பழுக்கில்லா நெறியும் பின்பற்றி தன் உழைப்பால் உயர்பதவிக்கு வந்தவர் வி. கே. சி. நடராஜன்.

இலக்கிய ரசிகர்; எழுத்தாளர். வாசகர் வட்டம் வைத்து இலக்கிய தேனீக்களை வட்டாடவிட்டு தமிழ் வளர்த்த கலைத்தொண்டர்.

தனது மாமனுர் பாஸ்கரத் தொண்டைமானின் நண்பர்களையெல்லாம் தனது உறவினர்களாகப் பாவித்து பாசத்துடன் நேசிக்கும் அன்பு வடிவம்.

வி. கே. சி. நடராஜன் கன்னி முனையில் அன்னை மடிசேர்ந்தார் என்ற சேதி கேட்டு கலங்காத தமிழ் உள்ளம் இல்லை. புலம்பாத வாய் இல்லை. கண்ணீர் சிந்தாத கண்கள் இல்லை.

இலக்கியத் தம்பதிகளாக தமிழ்த்தொண்டர்களாக—வாழ்ந்த வி. கே. சி. நடராஜன்—ராஜேஸ்வரி வாழ்க்கை மாண்புடையது. அந்த வாழ்வில் தனித்து நிற்கும் சகோதரி ராஜேஸ்வரிக்கும் அவரது குழந்தைகளுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

ஒரு சிறந்த அதிகாரியை, நேர்மையும் துணிவும் உடைய அதிகாரியை இழந்த தமிழக அரசினருக்கும் நமது அனுதாபம் தெரிவித்துக்கொள்கிருேம்.

# ★ ஜீவ காந்தா ★

—[எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு]—

(சென்ற மாதத் தொடர்ச்சி)

**நான்** மூன்று மாதங்களாகப் பெருமாள் மண்டபத் திருப்பணியிலேயே கவனமாக இருந்துவிட்டேன். தலைமைக் குமாஸ்தாவுக்கே செலவு இனங்கள் எல்லாம் தெரியும். யாவும் அப்போதைக்கப்போது கணக்கு புஸ்தகங்களில் பதியப்பட்டு வந்தன. தலைமைக் குமாஸ்தா கிருஷ்ணமாச்சாரி சென்னைக்கு மாற்றப்பட்டுப் புதிய குமாஸ்தா வந்து சேர்ந்தார். அப்பொழுதும் கணக்குகள் கிரமமாகவே பதிவு செய்யப்பட்டு வந்தன. புதிய குமாஸ்தா ஒரு வாரத்திற்கு முன்பு காலராவில் இறந்துவிட்டார். அவர் எழுதிவைத்திருந்த கணக்குகளை நான் பரிசோதிக்க நேரமில்லாமல் கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்துவிட்டேன். இவ்விதம் இருக்கையில் நான்கு தினங்கட்கு முன்பு திடீரென்று கணக்குப் பரிசோதகர்கள் வந்தனர். எல்லாவற்றையும் பார்வையிட்டனர். நானே என் கைப்படப் பதிவு செய்ய வேண்டிய கணக்குகள் இரண்டுவாரமாகப் பதிவு செய்யப்படாமல் வழக்கமாய் எழுதப்படும் குறிப்பேடுகளில் மட்டும் எழுதப்பட்டிருந்தன. அந்த குறிப்புக்கணக்குப் புஸ்தகங்களும், வேறு முக்கியமான தஸ்தாவேஜிகளும் காணவில்லை! தலைமைக் குமாஸ்தா கிருணமாச்சாரியை உடனே வரும்படி தந்தி கொடுத்திருக்கிறது. ஒரு உத்தேசத்துடன் கணக்கிட்டதில் இருபதினாயிரம் ரூபாய் குறைகிறதாக விசேஷக் கணக்குப் பரிசோதகர்கள் சொல்லினர். காலராவில் இறந்த குமாஸ்தா என்னென்ன வகையில் பணத்தைச் செலவிட்டாரோ, அந்த விவரங்களுள்ள கணக்கு புத்தகத்தையே காணோம். நான் இவைகளில் அதிக கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டதால் திகைக்கிறேன். குறைவுபடும் தொகையைக் கட்டிவிட ஏற்பாடு செய்து, மேல் நடத்தவேண்டியவைகளை வக்கீல் அவர்களை வைத்து நடத்து. தெய்வ சங்கல்பம்போல் முடியட்டும் என்று கண்ணீர் பெருகச் சொன்னார்.

இந்த சமயத்தில் தனக்கு வந்த தந்தியைக் கண்டு புறப்பட்டு வந்த தலைமைக் குமாஸ்தா கிருஷ்ணமாச்சாரி அங்கு வந்து சேர்ந்து கேசவலு நாயுடுவைக் கண்டு கதறினார். கேசவலு நாயுடு தாமும் கண்ணீர் விட்டபடியே இந்த சமயத்துக்குத் திருவல்லிக்கேணிக் கோவிந்தனைத் தருவித்தால் ஏதாவது கணக்கு புஸ்தகங்கள் அகப்பட்டுக் கொள்ளாதா? அவருக்கு உடனே ஒரு தந்தியை அனுப்புங்கள் என்று கிருஷ்ணமாச்சாரிக்குச் சொன்னார். அந்த நிமிஷமே கோவிந்தனுக்கு தந்தி அனுப்புவதாகக் கிருஷ்ணமாச்சாரி சொல்லி அவ்விதமே அனுப்பினார். மறுநாட் காலையில் கோவிந்தன் வந்து சேர்ந்து அங்கே நடக்கும் சங்கதிகளை யெல்லாம் கவனித்தபடியிருந்தார். சிலரை விசாரித்தபடியும் இருந்தார். குமுதவல்லியிடமும் போய்ப் பேசினார். அதிகமாக துக்கப்படுவோரைக் கவனித்தார்.

ஜீவானந்தம் தன் தாயாரிடம் இருபதினாயிரம் ரூபாய்களைக் கோர்ட்டில் கட்டியாக வேண்டுமென்று சொல்ல, உடனே குமுதவல்லி, தனது வைர நகைகளையும் மற்ற ஆபரணங்கள் எல்லாவற்றையும் கண்ணீரோடு தங்கத் தாம்பாளத்திலே கழற்றி வைத்தாள். அப்பொழுது அங்கு வந்த அழகிரிசாமி நாயுடுவையும் தஞ்சாவூர் சௌகார் ரத்தின சேட்டையும் பார்த்து, **இந்த நகைகளோடு இன்னும் வேண்டிய தொகைகளையும் நீங்கள் போட்டுக் கொடுத்து என் பர்த்தாவை மீளும்படி செய்யுங்கள்** என்று சொல்லி அலறியழுதாள். அதற்கு அழகிரிசாமி நாயுடுவும் ரத்தின சேட்டும் கண்ணீர் விட்டபடி, அம்மாதாயே, இந்த நகைகளை நீங்கள் கழற்றியிருக்கக் கூடாது; உடனே எடுத்து அணிந்து கொள்ளுங்கள். கேசவலுநாயுடு விடுதலையானால் அதுவே எங்களுக்குப் போதும். குறைவுபடுகிற இருபதினாயிரம் ரூபாய்களையும் இன்று பகலுக்குள் கட்டிவிடுகிறோம் என்று சொன்னார்கள். பிறகு அழகிரிசாமி நாயுடு பணம் கட்டுவதற்காகப் புறப்பட்டுக் கும்பகோணம் போனார். அவர் போன மறுநிமிஷமே ரத்தினசேட் கோர்ட்டில் பணத்தைக் கட்டிவிட்டு, அழகிரிசாமி நாயுடுவுக்குத் தாம் பணம் கட்டிவிட்டதாகக் கும்பகோணத்துக்குத் தந்தி அனுப்பினார்.

வழக்கு ஒரு மாதம் வரையில் விசாரணையானது. தலைமைக் குமாஸ்தா கிருஷ்ணமாச்சாரி முதல் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார்.

**கிருஷ்ணமாச்சாரி:**— எல்லாக் கணக்குகளும் சரியாகவே வைக்கப்பட்டு வந்தன. எனக்குப் பிறகு வந்தவரிடம் நான் ஒப்பிவித்துப் போனவற்றில் ரசீது புஸ்தகங்கள் நான்கும், குறிப்பேடு புஸ்தகங்கள் ஆறும் அடியோடு அகப்படவில்லை. ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பதிவாக வேண்டிய விவரங்கள் அக்கணக்கு புஸ்தகங்களில் இருந்தன. என் எஜமானர் சற்று அஜாக்கிரதையாக இருந்துவிட்டார். எனக்கு இரண்டாயிரம் ரூபாய்வரை செலவு செய்து விவாகம் நடத்திவைதத தர்மப் பிரபுவாகிய அவர் கம்பெனியை ஒரு நாளும் மோசம் செய்ய எண்ணியிருக்கமாட்டார். அவர் பிறர் சொத்துக்கு ஆசைப்படுபவரல்ல.

**சர்க்கார் வக்கீல்;**— இப்படி கண்டவர்களின் கல்யாணங்களை நடத்தியும், பல தர்மங்களில் அளவுக்கு மீறி மனம்போனபடி புத்திகெட்டும் செல்விடுகிறவர்கள், ராம்தாஸ் கதையில் அவர் நவாப்பினுடைய கஜானாப் பணத்தை எடுத்துச் செலவிட்டுப் பிறகு அகப்பட்டுக்கொண்ட கதைக்கே உதாரணமாவார்கள். அப்படியே கேசவலு நாயுடுவும் கம்பெனிப் பணத்தைத் தர்ம விஷயங்களில் செலவிட்டுவிட்டார் போலும்! பிறகு பண இருப்பு குறையவே கணக்கு புஸ்தகங்களை மறைத்துவிட்டிருக்கலாம்! இப்படித்தான் நடந்திருக்கவேண்டும். கேசவலு நாயுடு தமது வீட்டுக்கென்று செலவிட்டு மோசம் செய்திரார் என்று மட்டும் நிச்சயமாகச் சொல்லலாம்.

கேசவரின் வக்கீல் இதை எதிர்த்துப் பேசினார். இன்னும் இரண்டு வக்கீல்கள்கூட இருந்து கேசவரின் பக்கமாய் வாதித்தார்கள். எல்லோரும் கேசவர் விடுதலை செய்யப்படுவாரென்று நிச்சயமாய் நம்பினார்கள். கடைசியில் தீர்ப்பும் சொல்லப்பட்டது. **"கேசவர் கையாடல் செய்ததாகச் சொல்லப்படும்** ரூபாய்

இருபதினுயிரம் என்பது ஒரு உத்தேசத் தொகையே தவிர, அதற்கு மேலும் இருக்கலாம். அந்த இருபதினுயிரம் ரூபாய்களை கோர்ட்டில் கட்டிவிட்டிருந்தாலும், மறைக்கப்பட்டுப்போன புஸ்தகங்கள் அகப்பட்டு, அவற்றைச் சோதித்தால் இன்னும் அதிக தொகை கையாடல் செய்ததாய் ஏற்படலாம். கேசவர் அதிக தர்மவானுய் அதிக செலவுக்காரராய் இருந்ததால் இந்த குற்றத்தை அவர் செய்திருக்கக் கூடும். ஏனெனில் பெரிய குடும்பங்களில் பிறந்தவர்கள் பணத்தினுடைய அருமை தெரியாமல் மனம் போனபடி செலவழித்துவிட்டு, கடைசியில் திருப்பிக்கொடுப்பதற்கு மார்க்கமில்லாமற் போய்விட்டால் இவ்வித குற்றங்களைச் செய்வது சகஜமாயிருக்கிறது. ஆகவே கேசவர் குற்றம் செய்திருப்பாரென்றே தீர்மானித்து அவருக்கு ஏழுவருஷம் கடுஞ்சிறை விதிப்பதாய்த் தீர்ப்புசொன்னுர்.

(தொடரும்)

—————

## மதிப்புரை

[பூத்தது மானுடம்:- ஆசிரியர் சாலை இளந்திரையன். விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை-1. பக்கங்கள் 160-விலை ரூ. 3.]

கவிஞர் சாலை இளந்திரையன் 'இளந்திரையன் கவிதைகள்' 'அன்னை நீ ஆடவேண்டும்', 'சிலம்பின் சிறு நகை', காலநதி தீரத்திலே' என்னும் கவிதை நூல்களிற் வாயிலாக முன்னமேயே தமிழ் உலகிற்கு நன்கு அறிமுகமானவராவர். இவர் புதுமைக் கவிஞர்களான பாரதியார், பாரதிதாசன் வழிவந்து தனக்கென்று சில தனித் தன்மைகளையும் கொண்டு கவிதைகள் எழுதி வருபவர். இவரது கவிதைகளில் கருத்துப் புதுமையையும் நடைப் புதுமையையும் ஒருங்கே காணமுடிகிறது.

'பூத்தது மானுடம்' என்னும் இந்நூல் தமிழ்த் தேசியம், இந்திய தேசியத்தையும் தாண்டி மனிதகுலமுன்னேற்றத்தை அவாவுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பூங்குன்றனுரின் கவிதைக்கு புதுவழி காட்டுகிறது.

இந்நூலில் ஆசிரியர் நான்கு பெரும் பிரிவுகளில் எழுபது பாக்களை எழுதியுள்ளார். ஆசிரியரின் சமத்துவம் காணும் பொதுவுடமை உள்ளத்தை இப்பாக்களில் நன்கு காணமுடிகிறது. இவரின் சொல்வளமும் உரிய இடங்களில் உரிய சொற்களை ஆளும் திறனும் இவ்வகையில் பெரிதும் உதவக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக 'புதிய வீணை' என்னும் தலைப்புக் கவிதையில்,

சோச லிசச்சுடர் தோன்றியபின்—
அங்குத்
தூங்குவ தார்? எழு! துள்ளி எழு!
வீரம் விளைத்திடும் வேகமில்லார்
-உன்றன்
வீறுகள் கண்டு முணு முணுப்பார்
சாரமில்லாப்பழஞ் சாத்திரமாம்—தனை
தன்னையே மாட்டிட எத்தனிப்பார்...!
போடு பழங்கதை மண்டையிலே-
புதுப்
புத்தம் புதுநினை வாணிகளை!

என்னும் வரிகள் மிடுக்கோடு நடக்கின்றன. உழைப்பாளிகளாலேயே உலகம் உருவாவதையும் அவர்கள் புறக்கணிக்கப்படும் கொடுமையையும் கவிஞர்,

"மேலெழுந்து மேலெழுந்து
மாடமாகிறோம்-விண்
மீதெழுந்த கோள்களோடு
நண்பராகிறோம்
கீழிருக்கும் மூலக்கல்லை நாம்
வெறுப்பதோ!—அது
கீழுமட்டும் மேலும் மேலும்
பாரமாவதோ!"

என்று உணர்ச்சியோடு கூறுகிறார்.

கெட்ட போரிடும் உலகத்தை மாற்றி, அமைதி தவழும் உழைப்பாளர்கட்கு உரியதான புத்துலகம் காண எல்லா நாட்டு மக்களும் விரும்பும் இந்நாளில் இக்கவிதைத் தொகுதி அதை உரமூட்டி வளர்க்கும் பணிபுரியும் என்பதில் ஐயமில்லை. காதல், வீரம் என்பது போன்ற பாடிய தலைப்புகளிலேயே பாடாமல் புதிய துறையில் கவிஞர் கண்ணோட்டம் செய்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. இதன் மூலம் ஆசிரியர் ஒரு புதுவழி காட்டுகிறார். இவர் காணும் மானுடம் புதியது; சமத்துவம் விழைவது; மூடப் பழக்கவழக்கங்களை முறியடிப்பது; எதையும் பகுத்தறிவுகொண்டு காண்பது; எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலைநாடுவது. கவிதையில் நல்ல கருத்துக்களையும் காணவிழைவார்க்கு இந்நூல் மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியர் நம் பாராட்டிற்கு பெரிதும் உரிமையுடையவர்.

## அருணை மலரின் ஆண்டு மலர் வெளியீட்டு விழா

வடாற்காடு தமிழ் எழுத்தாளர் சங்க ஆதரவில் 11-8-1968 ஞாயிறன்று விக்டோரியா இந்து பாடசாலையில் அருணைமலர் இரண்டாம் ஆண்டு விழாமலர் வெளியீடு நடைபெற்றது. விழாவிற்கு திரு. ஆர். பி. நாகராசன் பி. ஏ., பி. டி., தலைமை தாங்கினர்.

மலர் வெளியீட்டை நிகழ்த்திய திரு. வி. வி. திலகசாஸ்திரி எழுத்தாளர்கள் கடமை, மலரின் பெருமை இவைகளை விளக்கி இளம் எழுத்தாளர்கள் சமுதாய நலனுக்கு எத்தகைய கட்டுரைகளைப் படைத்து தவவேண்டுமென்றுர்.

அடுத்துச் சிறப்புரையாற்றிய வ. ஆ. த. எ. சங்க செயலாளர், திரு. ப. தாண்டவராயன் எழுத்தாளர்கள் தங்கள் பாரம்பர்யத்தினின்றும் நழுவலாகாதென்று வற்புறுத்தினர்.

"அருணைமலர்" சின்னத்தைத் திறந்துவைத்த திரு. கோ. இராமானுஜம் இன்றைய சமுதாயத்தில் பெண்கள் கடமை என்பது பற்றி சொற்பொழிவு ஆற்றினர்.

திரு. கோ தனபால், விழாக் குழுத் தலைவர், வரவேற்றுப் பேசினர். பதிப்பாசிரியர் பழ. அமிர்த லிங்கம் மலரின் நோக்கங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். திருவாளர்கள். ப. இராமலிங்கம், இராஜவேலு, இஸ்லாமியவாணன் ஆகியோர்கள் எழுத்துலகின் கடன் பற்றிப்பேசினர்கள். அருணை மலர் ஆசிரியர் திரு. சுந்தரசங்கரன் நன்றி நவில நாட்டு வணக்கத்துடன் விழா முடிவுற்றது. விழாத்துவக்கத்தில் மங்கள இசையுடன் துவங்கியது.


## "எழுத்தாளன்"

(மாத இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.

விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு.
திருச்சி-2,

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 11. ராசக்கலைஞர்கள்

[கி. முத்துராமகிருஷ்ணன்]

★

இளசை மன்னர்கள் கவிஞர்களை வளர்த்தனர் ஆதரித்தனர்; அதே சமயம் கலைஞர்களை ஆதரித்தனர். தாமே கலைக்குழு அமைத்து அதனில் ஈடுபாடு கொண்டு கலையை முக்யமாக நாடகக் கலையை வளர்த்தனர். வளம் பெறச் செய்தனர்.

மறைந்த நகைச்சுவை மன்னர், கலைவாணர் என்ற ஏற்றம்பெற்ற என். எஸ். கிருஷ்ணன் எட்டயபுரத்தில் உருவாகப்பெற்றவர். முத்தமிழ் கலா வித்வரத்தினம் அவ்வை டி. கே. சண்முகம் இளசையில் ஏற்றம் பெற்றவர். நடிகமணி டி. வி. நாராயணசாமியும் அண்மைக் காலம்வரை எட்டயபுரம் கலைக் குழுவில் இருந்து ஏற்றம் பெற்றவராகும். எட்டயபுரம் மன்னர் பரம்பரையினர்களில் இதுவரை 40 பேர் பட்டம்பெற்ற விவரத்தினை வாசகர்கள் ஏற்கனவே தெரியப்பெற்றவர்கள் ஆவார்.

37வது பட்டம்பெற்ற செகவீர குமார வெங்கடேசுர எட்டப்பன் என்பவர்கள் 1900வது ஆண்டில் பட்டம் பெற்றார். இவர் தமிழ் கல்வியும் பயின்றார். ஆங்கிலேய பள்ளியில் சேர்ந்து நன்றாக ஆங்கிலமும் கற்றார். இவர் தகப்பனார் இறந்த சமயம் இவர் வயது பெறாத காரணத்தினால் சில ஆண்டுகாலம் எட்டயபுரம் கோர்ட் ஆப் ஆர்ட்ஸ் ஆட்சிக்கு உள்ளாகி இருந்தது.

இவர்கள் சுதர்சன் பாதுகா பட்டாபிஷேகம் போன்ற நாடகம் எழுதினார். தன்னால் ஆதரிக்கப்பெற்ற நாடக சபையில் நாடகமும் நடத்தினார். இளசையில் தனி நாடகக் கொட்டகை ஒன்றும் அமைத்து இருந்தார்கள். இவர்கள் பசுவந்தனை என்ற கிராமத்தில் 40,000 ரூ. செலவில் யாகம் செய்தார்கள்,

1911ம் ஆண்டில் 5வது ஜார்ஜ் மன்னர் புதுடில்லியில் இவருக்கு ராசா பட்டம் கொடுத்தார். எட்டயபுரம் அரசர் 40 பேரில் இவர் ஒருவர்தான் ராச பட்டம் பெற்றவர் ஆவார்கள். மற்றவர்களுக்கு ஜமீன்தார் பட்டம் மட்டுமே உண்டு.

இவருடைய சிறிய தகப்பனாரான வெங்கடேஸ்வர எட்டப்பன் என்பவர் சிறந்த தமிழ் அறிஞர். இவர் நாடகக் கலையை வளர்க்க தன் அண்ணன் மகனுக்கு உறு துணையாக இருந்தார். ராசாப் பட்டம் பெற்றவருக்கு 7 மனைவியர் உண்டு. ஆனால் குழந்தைச் செல்வம் இன்றி 1915ம் ஆண்டு இறந்ததினால் சிறிய தகப்பனார் பட்டம் பெற்றார்.

பட்டம் கட்டுவதற்கு செய்கை என்ற இடம் உள்ளது. அங்கு சேர்வைகாரர் என்பவர் தளவாய் தலைமையில் வந்து பட்டம் கட்டுவார். இந்த செய்கை என்ற இடத்தில்தான் கடிகை முத்துப்புலவர், உமர் புலவர், பெத்தணன் தளவாய் நாகூர் முத்துப் புலவர் போன்ற பல அறிஞர்கள் தமிழ் பாடிய அரங்கமாகும். அது இன்றும் உள்ளது.

தாதா மகாராஜா என்று மக்கள் செல்லமாக அழைப்பவர்தான் பாரதியாரை உருவாக்கியவர். பாரதியாரின் தகப்பனார் சின்னசாமி ஐயர் இவரிடம்தான் தமிழ்ப்பணி புரிந்து வந்தார். இவரது தமிழ் சபையில்தான் பாரதி என்ற பட்டத்தை புலவர்கள் சுப்பிரமணியனுக்குச் சூட்டி சுப்பிரமணிய பாரதியாக்கினார்கள்.

தாதா மகாராசா நாடகக் கலைஞர். இவர் காலத்தில் மனோகரன் நாடகத்தை நடத்தினார். மனோகரனாக எட்டயபுரம் முத்தையா என்பவர் நடித்தது மிக நன்றாக இருந்தது. அதனால் இந்த நாடகத்தை எழுதிய கர்த்தா, பம்மல் சம்பந்த முதலியாரிடம் நேரில் நடித்துக் காட்ட விரும்பினார். அதனால் எட்டயபுரம் நாடகக் கம்பெனியார் சென்னையில் முகாம் இட்டனர். ஒற்றைவாடைத் தியேட்டரில் மனோகரா நாடகம் நடைபெற்று வருகிறது. ஒருநாள் இதன் ஆசிரியரே நாடகத்தைக்காண அழைக்கப்பெற்று வந்து நாடகம் பார்க்கிறார்.

முத்தையா என்ற இளைஞர் 26 வயதினர். நாடகத்தில் மனோகரனாக நடித்து வருகிறார். நாடகத்தின் உச்சக் கட்டம் வருகிறது. அது தான் வெட்டுசீன் என்பார்கள். மனோகரன் தன் தகப்பனையே வெட்டச் செல்கிறார். தாய் வந்து தடுக்கிறாள். இது தான் மிக நயம்பட நடிக்கவேண்டிய கட்டம் இதனை நடிகர் திறம்பட நயமாக வீரமாக கோபமாக அதே சமயம் பாசமாக நடித்தார். கதை ஆசிரியர் மெய்சிலிர்க்கிறார். தாம் தானே இதனை எழுதியது; இளைஞர் தானே மனோகரனாக மாறி இதனை சிறப்பாக நடித்தார் என நினைந்து தானே மேடை ஏறி இளைஞர் முத்தையாவைப் பாராட்டினார். மன்னரும் மனமகிழ்ந்தார், உங்களுக்குத் தெரிய உண்மை ஒன்று சொல்லுகிறேன். இன்னும் அந்த நடிகர் எட்டயபுரத்தில் மனோகர முத்தையன் என்ற பெயரில் உலவிவருகிறார். இதனை அவரே கூறஎழுதுகிறேன்.

நாடக ராசா MR. கோவிந்தசாமி அவர்கள் நடிப்புபற்றியும் சித்திர மன்னர் காசிவிசுவநாதன் பற்றியும் பின்புவரும். அதற்குள் பாரதியார் எப்படி இந்த தமிழ் கலைஞரை பாராட்டினார் என்றுமட்டும் கூறிக் கொள்கிறேன். 2—5—1919 அன்று எட்டயபுரத்திற்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வருகிறார். மன்னரை நேரில் காண விரும்பவில்லை என்றாலும் மன்னரின் தமிழ் புலமை இவரை ஆட்கொண்டது. மன்னா நீ மகுடம் புனைந்தாய் தமிழ் அரியாசனம் ஏறியதுஎன்று பாடினார் பாரதி.

மன்னவனே தமிழ்நாட்டில் தமிழறிந்த
  மன்னரிலை யென்று மாந்தர்
இன்ன லுறப்புகன்ற வசை நீ மகுடம்
  புனைந்த பொழுதே இறந்த தன்றே
மன்னா உன் தமிழ் வாழ்க.

என்றுதான் வாழ்த்தினார்.

இவரது சொற் சுவையான பேச்சை யாவரும் கேட்டு இன்புறுவர். கம்ப ராமாயணத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராவார். இவர் 1928ல் மரணம் அடைந்தார். தமிழ் அறிஞராக கலைஞர் மறைந்தார் என்றே மக்கள் வருந்தினர். வாழ்க அவர் நாமம்! வளர்க கலைகள்!



# LEO TOLSTOY

One hundred and forty years have passed since the day when Leo Tolstoy was born. His name is famous all over the world. Tolstoy's books are published in hundreds of languages and in dozens of countries of the world. A number of schools, libraries, clubs, palaces of culture, museums, streets and squares in many towns and cities are named after him.

Leo Tolstoy was born in Russia, in the Yasnaya Polyana estate. He lost his parents when he was still a child. He was brought up by a relative. Tolstoy spent the greater part of his life in Yasnaya Polyana. For some years he lived in Moscow and St. Petersburg too, and studied in Kazan. He travelled widely, visiting France, Italy, Germany and Switzerland.

Tolstoy wss an ardent patriot and a brave soldier. He took part in the Caucasian campaign and the Crimean war. While in Caucasus, he wrote the books "Childhood", "Boyhood", "The Incursion", "Notes of a Billiard-marker" and others. His "childhood" immediately placed Tolstoy in the ranks of the greatest Russian writers. He put his rich experience to use in writing his military stories including the widely-known TALES OF SEVASTOPOL. As a writer he was interested not so much in the battles themselves as in the behaviour of people in action. He was interested in the psychology of courage and cowardice in war. He knew how the heroes were born!

He championed the cause of the poor peasants. In his writings he denounced the rich and the Tsarist government for their tyranny. Tolstoy's stories such as "The Death of Ivan Ilyich", "Father Sergii", "Haji Murat" and "After the Ball" as well as his plays and other works are widely known. Tolstoy was deeply interested in public education and devoted much time to it. He organised and financed a school for peasant children in Yasnaya Polyana and taught them. It was in the seventies of XIX Century that Tolstoy published his famous "Tales for Children", largely based on folk-tales, legoneds, proverbs and fables. Most of them preached submissive religions humility and non-resistance to evil.

## Betwen Two Turning Points:—

The flourishing of Tolstoy's work coincided with the period of Russian history between two turning points in the life of the country — the year 1861, when selfdom was abolished, and the year 1905, which marked the beginning of the first revolution in Russia. During these years Tolstoy wrote his famous novel "War and Peace", on which he spent more than six years. He presents the war in Russia against Napoleon's invasion as a war of the people, a just war. The people defended their national independence and their historical right to decide their own fate.

In the 1870's Tolstoy finished his work on another big novel, "Anna Karenina", which reflected a whole epoch in Russian life. The novel presents the tragedy of a young woman who struggles for the right to happiness but perishes under the oppression of the false, heartless morals of society.

In 1882 Tolstoy took part in the census of Moscow's population. The terrible conditions of the city, poor, which he came across, produced an overwhelming impression upon him. In his articles entitled 'Confession", 'What I believe', 'What Then Must We do?" he reviewed, with great emotion and sincerity, what the society of his day lived with sharpely criticising the zealously guarded social and state system of tsarist Russia.

The novel 'Resurrection' was a most passionate protest against the very foundations of the autocrac The accusatory power of this wo was so great that the novel app ared in print with serious distortio made by the censors.

In his last years Tolstoy was eve more disgusted by his life in Yasnay Polyana, the life of a rich perso among needy peasants. Having los his spiritual peace he kept thinkin ever more persistently about leavin Yasnaya Polyana. At last, o October 28, 1910, Tolstoy, at the ag of 82, carried out his intention an secretly left Yasnaya Polyana. On th way he fell ill with pneumonia an died on November 7.

## His World Significance.

Lenin, what evaluating the significance of Tolstoy's work wrote: "His world significance as an artist, his world renown as a thinker and preacher, both reflect, each in its own way, the world significance of the Russian revolution."

The outstanding writers of the world mastered the great art of Tolstoy's realism, his ability to raise most important socio-philosophical and ethical problems of the period. They learned from Tolstoy the art of psychological analysis, the art of depicting man in his profound ties with the life of society and with nature.

★

*A Short Story:*

# THE SHARK

(By Leo Tolstoy)

Our ship lay at anchor at the shores of Africa. It was a fine day, a fresh breeze blew in from the sea, but towards the evening the weather changed—it became sultry and stuffy as if the hot air was blowing from a heated stove.

Before the sunset, the Captain came out on the deck and called: "Swim!" The next moment all the

sailors jumped into the water, lowered the sail, tied it down and turned it into a swimming pool.

There were two young boys with us on board. They were the first to jump into the water. But they felt crowed in the pool, so they decided to have a race out in the open sea.

Stretched out in the water like lizards they both swam as fast as they could, to the place where a barrel rocked in anchor.

After sometime one of the boys began to fall behind. His father, an old artilleryman, was standing on deck watching them. Seeing his son falling behind, he called out to him: "Don't give in! Buck up quick"!

Suddenly someone cried from the deck: "Shark!" Everybody saw the back of the sea-monster in the water.

The shark was heading straight for the boys.

"Back! Back! Come back! Return! There's a shark behind you!" cried the artilleryman. But the boys could not hear him; they swam on and on, laughing and shouting as gaily and loudly as ever.

Pale as a sheet, as if entranced, the artilleryman, watched the children.

The sailors lowered a boat, jumped into it and, rowing desperately, rushed towards the boys. But they were too far behind. The shark was no more than 20 strides away.

The boys still did not hear the shouts of the men, nor did they notice the shark. But then one of them by chance, looked over his shoulder — and we heard a shrill scream. The boys now swam in opposite directions.

The scream shook the artilleryman out of his trance. Rushing over to the cannons with a jerk he turned the barrel of one of them, bent over it, aimed and picked up a fuse.

The gun boomed, the artilleryman hid his face with his hands. We could not see what had happened to the shark and the boys, because a viel of smoke hung over the spot.

When at last the smoke cleared from over the water, a quiet murmur was heard from all around then murmur grew louder until everybody gave a jubilant shout.

The old artilleryman uncovered his face, rose to his feet and scanned the sea.

The yellow belly of the dead shark rocked on the waves. Moments later, the boat reached the boys and brought them back to the ship, safe and sound.

---

# பயனுண்டு பிறவியால்

(முகவை வாசுகிநாதன்)

1 பாரத நாட்டு வீரப் பண்பினை விரித் துரைத்துப்
பாரத மன்றிருந்த பதத்தினை மாற்றிவைத்து
நேரொரு நாடுமின்றி நிமிர்ந்திடக் கவிபுனைந்தான்
பாரதி என்ற ஞானி! பதமலர் தலையிற் கொள்வாம்!

2 உடலிலே பலமிருந்தும் உணர்விலே அடிமையானார்
கடமையில் உணர்விருந்தும் காரியம் செய்யா ரானார்!
புடலென வளர்ந்து வந்த புதியவெண் மனித ராட்சிக்
கிடமிலை யினியிங் கென்றே எழுச்சிப்போர் செய்யலானார்!

3 மூப்பது கோடியாக மூத்தநம் வீரர் கண்டார்
முப்பது கோடி மூச்சும்! முந்தையர் நாட்டுக்கென்றே
எப்பதம் இருந்தார் தாமும் இயம்பிட எழுச்சி தந்தார்
முப்பெருங் காலமெல்லாம் முழுதுணர் கவிஞன் மாதோ!

4 விடுதலை பெறவிழைந்தான்! விழைந்ததை நாளும் செய்தான்
கெடுதலை நினையான்! நாட்டுக் கேட்டினைக் களைந்தான் மக்கள்
படுதலை மறந்தான்! அன்னார் பசியினை மறந்தானில்லை
விடுதலைத் தாகம் கொண்டான் வெற்றிப்பா கவிஞன் மாதோ

5 காதலில் வீரம் சொல்லிக் கடமையின் வீரம் சொன்னான்!
மாதர்தம் வீரம் சொல்லி! மங்கையர் கற்பும் சொன்னான்!
ஈதலின் வீரம் சொல்லி! இன்மையின் ஈனம் சொன்னான்!
சாதலில் வாழ்வைக்கண்டான்! சந்ததம் நினைவு கூர் வோம்

6 அன்னவன் தன்னை மக்கள் அகத்தினில் கொள்ள வேண்டும்
கன்னலாய்! தேனாய்! நன்கு காய்ச்சிய பசுவின் பாலாய்!
உன்னவே இனிக்கும் அன்னோன் உயர்கவி அமுதம் தன்னை
பன்முறை உண்ணல் வேண்டும்! பயனுண்டு பிறவி யாலே

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.